Reg. No. : ........................................

Code No. : 30571 Sub. Code : CATA 41

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2024.

Fourth Semester

தமிழ் — Allied

அறிவியல் தமிழ்

(For those who joined in July 2021 – 2022 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தொழில்நுட்பம் தொடக்கத்தில் எவற்றைச் சார்ந்ததாக அமைந்திருந்தது?

 (அ) தலைமுறை (ஆ) இடைவெளி

 (இ) கல்வி (ஈ) அறம்

2. மீன்பிடிக்கப் பயன்படுத்தும் படகு எவ்வாறு அழைக்கப்பட்டது?

 (அ) நாவாய் (ஆ) படகு

 (இ) திமில் (ஈ) தோணி

3. இந்திய அரசு மெக்காலே கல்வித்திட்டத்தினை அறிமுகப்படுத்திய ஆண்டு எது?

 (அ) 1835 (ஆ) 1830

 (இ) 1840 (ஈ) 1842

4. கொடுமணல் பற்றிய செய்திகளை குறிப்பிட்ட நூல் எது?

(அ) பட்டினப்பாலை (ஆ) பதிற்றுப்பத்து

(இ) புறநானூறு (ஈ) பரிபாடல்

5. 'அறிவு வளர்ச்சியில் அன்னியம் என்பது இல்லை' என்று கூறியவர் யார்?

(அ) தெ.பொ.மீ (ஆ) குழந்தைசாமி

(இ) கவிமணி (ஈ) பாரதியார்

6. ஒட்டுண்ணி என்பதன் கலைச்சொல்லாக வெ.ப.சு கூறுவது எதனை?

(அ) தத்தை (ஆ) வந்தை

(இ) பந்தை (ஈ) வெறுமை

7. தமிழில் எத்தனை துறைவழக்கு உள்ளன?

(அ) 2 (ஆ) 3

(இ) 4 (ஈ) 5

8. பிராகிருதி சாஸ்திரம் தமிழில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) வேதியியல் (ஆ) அறிவியல்

(இ) இயற்பியல் (ஈ) புவியியல்

9. Anti-leprosy என்னும் சொல்லில் இடம்பெறும் ANTI என்பது எப்பொருளில் வருகிறது?

(அ) பகை (ஆ) ஒழிப்பு

(இ) முரண் (ஈ) எதிரி

10. கேணி தோண்டுவது பற்றிய அறிவைத் தரும் நூல் எது?

(அ) பிங்கல நிகண்டு (ஆ) திவாகர நிகண்டு

(இ) கூவ நூல் (ஈ) அறிவியல் தமிழ்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) அறிவியல் தமிழ் – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) தமிழரின் உலோகத் தொழில்நுட்பத்தில் பொன் பற்றி எழுதுக.

12. (அ) அறிவியல் மொழியாக்கத்தால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'தமிழில் கலைக்களஞ்சியங்கள்' – எடுத்துரைக்க.

13. (அ) இலக்கண தமிழுக்கும் இசைத்தமிழுக்கும் உள்ள மாறுபாட்டை தொல்காப்பியர் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அறிவியல் செய்திகளைத் தாங்கிய இதழ்களை எடுத்தியம்புக.

14. (அ) பழஞ்சொற் பயன்பாட்டின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அறிவியல் தமிழில் உருபனியலின் வளர்ச்சியை விவரிக்க.

15. (அ) சுரப்பி குறித்த கலைச்சொற்களில் ஐந்தினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இலங்கை மற்றும் தமிழகம் மருத்துவ வழக்குகளை ஒப்புமைப்படுத்தி கூறுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

600 சொற்களுக்கு மிகாமல் விடை எழுதுக.

16. (அ) அறிவியல் தமிழ் என்றால் என்ன? அவற்றின் பணிகளை தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அறிவியல் தமிழில் ஆக்கப்பணிகள் நடைபெற என்ன செய்ய வேண்டும்? விவரிக்க.

17. (அ) இருபதாம் நூற்றாண்டுக் காலக்கட்டம் அறிவியல் தமிழின் மறுமலர்ச்சி யுகம் என்பதனை ஆராய்க.

(அல்லது)

(ஆ) அறிவியல் தமிழ் நூல்களின் வகைகளை விளக்குக.

18. (அ) அறிவியல் தமிழ்ப் பாட்த்தின் சிறப்புப் பண்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இன்றைய தமிழ் அமைப்பில் காணப்படும் ஒலியனியல் மாற்றங்களைக் குறித்துக் கட்டுரைக்க.

19. (அ) கலைச்சொல்லாக்கத்தில் சமுதாய உணர்வு இடம்பெறும் விதத்தினை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) கலைச்சொல்லாக்க நெறிமுறைகளைப் புலப்படுத்துக.

20. (அ) திவாகரம், பிங்கல நிகண்டு தரும் உடல் உறுப்புக் கலைச்சொற்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) எலும்பு பற்றிய கலைச்சொற்களைத் தொகுத்தெழுதுக.